**<u>சாட்சிய வாக்குமூலம்</u>**

# மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், தென்காசி.

## OS. No.110 /2024

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வா.சா | : | 3 | நாள் | : | 15.07.2025 |
| பெயர் | : | கணேஷ்ராஜா | ஜாதி | : | |
| தந்தை பெயர்/ | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுகா | : | | வயது | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 15th day of July 2025.

சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.

**<u>முதல் விசாரணை:</u>**

நான் இவ்வழக்கில் வாதி தரப்பு சாட்சி ஆவேன். அம்பாசமுத்திரத்தில் குடியிருந்து வருகிறேன். என் தந்தை பெயர் வெங்கடகிருஷ்ணராஜா என்னுடன் பிறந்தவர்கள் நான்கு சகோதரர்கள். எங்கள் பூர்விக சொத்துக்களையும் எங்கள் தந்தையின் சொத்துக்களையும் நாங்கள் பாகம் பிரித்துக் கொண்டோம். அவ்வாறு பாகம் பிரித்துக் கொண்ட பின்னர் அதனை உறுதி செய்து ஏற்படுத்தப்பட்ட ஆவணம்தான் வா.சா-ஆ.17 ஆகும். அதில் 3 வதாக உள்ள கையொப்பம் என்னுடையதுதான். வா.சா.ஆ.17 ல் கூறப்பட்டுள்ள முறைப்படிதான் சொத்துக்களை நாங்கள் அனுபவித்து வருகிறோம். ஜனார்த்தன ராஜா என் சகோதரர் இறந்துபோனார். ஜனார்த்தன ராஜாவுக்கு ஒரு மகனும், ஒரு மகளும் உள்ளனர். அவர்கள் பெயர் அய்யப்பன், உமா. ஜனார்த்தன ராஜாவின் மனைவி பெயர் பாமா. என் பாட்டி மஞ்சம்மாள் ஓர் உயில் ஆவணம் எழுதி வைத்ததாக கேள்விப்பட்டேன் பார்த்ததில்லை. விஜயனுக்கு ஆதரவாக எழுதி வைத்ததாக கேள்விப்பட்டேன்.

<u>**குறுக்கு விசாரணை :**</u>

என் தாத்தா பெயர் நல்லையா, பாட்டி பெயர் மஞ்சம்மாள். அவர்களுக்கு வெங்கடகிருஷ்ணன், ராமகிருஷ்ணன் என இரண்டு மகன்கள். நல்லையா பெயரிலும் நிறைய சொத்துக்கள் இருந்தது என்றால் சரிதான். மஞ்சம்மாள் பெயரிலும் நிறைய சொத்துக்கள் இருந்தது. நல்லையா இறக்கும்போது மஞ்சம்மாள், வெங்கடகிருஷ்ணன், ராமகிருஷ்ணன் ஆகியோர்களை வாரிசாக விட்டுவிட்டு இறந்துபோனார். அவர்கள் மூவரும் சொத்துக்களை தங்களுக்குள் பாகம் பிரித்துக் கொண்டார்களா இல்லையா என்று எனக்கு தெரியாது. அதுபோன்ற ஆவணம் எதையும் நான் பார்த்ததும் இல்லை. வா.சா.ஆ.17 ஆவணத்தை படித்து பார்த்துதான் கையொப்பம் செய்தேன். அந்த ஆவணத்தில் கூறப்பட்டுள்ள சொத்துக்கள் வெங்கடகிருஷ்ணன் மற்றும் எங்களுக்கு எவ்வாறு பாத்தியப்பட்டது என்று கூறப்படவில்லை என்றால் சரிதான். அந்த சொத்து விபரத்தில் எந்த சொத்திற்கும் கதவு எண்ணும், புல எண்ணும் கூறப்படவில்லை என்றால் சரிதான். மஞ்சம்மாள் ராமகிருஷ்ணன் பெயருக்கும் ஒரு உயில் எழுதி வைத்திருந்தார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. விஜயன் பெயருக்கும் ஒரு உயிலை எங்கு வைத்து யார்மூலம் எழுதி வைத்தார் என்றும் தெரியாது. அதனால் மஞ்சம்மாள் விருப்பத்துடன் எழுதிவைத்தாரா இல்லையா என்று எனக்கு நேரில் தெரியாது என்றால் சரிதான். வாதி என் சகோதரர் என்பதால் பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் தந்தைக்கும் அவரது சகோதரர் மற்றும் பாட்டிக்கும் இடையே பாகப்பிரிவினை ஏதும் ஏற்படவில்லை என்பதால் சொத்துக்கள் கூட்டு அனுபவத்தில்தான் இருந்து வருகிறது என்றால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை இல்லை**</u>

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2025.07.15 18:02:30 +0530